ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2184/9 - 2020 ජූලි මස 13 වැනි සඳුදා - 2020.07.13

*2184/9 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு யூலை மாதம் 13 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி IV (அ) - மாகாண சபைகள்

### மாகாண சபை அறிவித்தல்கள்

### கிழக்கு மாகாண மாகாண சபை

அறிவித்தல்

கிழக்கு மாகாணத்தின் ஆளுநர் அநுராதா யஹம்பத் ஆகிய என்னால், 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர் விளைவான) சட்டத்தின் 2 ஆவது பிரிவுடன் இணைத்து வாசிக்கக் கூடியதான 252 ஆம் அத்தியாயத்தின், மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 289 (1) ஆம் பிரிவில் விடயதான அமைச்சருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம், எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தினால் மாநகர சபையின் மாநகர முதல்வர், பிரதி மாநகர முதல்வர் மற்றும் உறுப்பினர்களுக்கான கீழே காட்டப்பட்டுள்ள கொடுப்பனவுகளுக்கான விதிகள் இத்தால் ஆக்கப்படுகின்றது. இவ் விதிகள் 2020, யூன் 23 ஆந் திகதியிலிருந்து செயற்படுத்தப்படுதல் வேண்டும்.

**அநுராதா யஹம்பத்,**
ஆளுநர்,
கிழக்கு மாகாணம்.

ஆளுநர் செயலகம்,
கிழக்கு மாகாணம்,
2020, யூன் 23.

விதிகள்

**01. மாநகர முதல்வர்களுக்கு, மாநகர சபையின் உத்தியோகபூர்வ போக்குவரத்திற்கான எரிபொருள் வரையறை.-**

*1. 1* மாநகர சபையின் வாகனம் ஒன்றினை மாநகர சபை எல்லைக்குள் பயன்படுத்துவதாயின் மாதமொன்றுக்கு பெற்றோல்/ டீசல் 80 லீற்றருக்கு அதிகரிக்காமலும், குறிப்பிட்ட வாகனமானது மாநகர சபை எல்லைக்கு வெளியே அலுவலக நோக்கத்திற்காக பயன்படுத்துவதாயின் மாதமொன்றிற்கு பெற்றோல்/டீசல் 100 லீற்றருக்கு அதிகரிக்காமலும் வழங்க மாநகர சபை நிதியிலிருந்து பயன்படுத்தலாம்.

*1. 2* மாநகர சபையின் வாகனமல்லாத சந்தர்ப்பத்தில் மேலே குறிப்பிட்ட எரிபொருளுக்கான செலவு வரையறையினை விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அனுமதியைப் பெற்று, வாடகை வாகனத்திற்காக/தனிப்பட்ட வாகனமொன்றுக்காக மேற் குறித்த எரிபொருள் அளவுகள் மற்றும் வாடகை செலவீனத்தை சபை நிதியிலிருந்து மேற்கொள்ள முடியும். வாடகைக்கு பெறும் வாகனத்திற்கான மாதாந்த வாடகைத் தொகை விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

*குறிப்பு :*

மாவட்டத்திற்கு வெளியே வாகனத்தினை எடுத்துச் செல்லும் பொழுது குறித்துரைக்கப்பட்ட படிவத்தின் ஊடாக உள்ளூராட்சி ஆணையாளரிடமிருந்து அனுமதி பெற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும்.

**02. போக்குவரத்துச் செலவு மற்றும் அதனோடிணைந்த கொடுப்பனவுகள்.-**

*2. 1* தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகளிற்கு அமைவாக அலுவலக ரீதியான கருத்தரங்குகள் மற்றும் நிகழ்வுகளில் பங்குபற்றுவதற்காக மாநகர சபையின் மாநகர முதல்வருக்கான கொடுப்பனவாக முழு நாளொன்றுக்காக ரூபா 1,500.00 இனை விஞ்சாத வகையில் இணைந்த படிகளுக்கான கொடுப்பனவொன்றை மேற்கொள்ள முடியும் என்பதோடு, இக்கொடுப்பனவு மாதமொன்றுக்கு ஆகக் கூடியது 10 நாட்களுக்குள் மட்டுப்படுத்தப்பட வேண்டியதுடன், 10 நாட்களுக்கு மேற்படுமாயின் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அனுமதி பெறப்படுதலும் வேண்டும்.

*2. 2* தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகளிற்கு அமைவாக அலுவலக ரீதியான கருத்தரங்குகள் மற்றும் நிகழ்வுகளில் பங்குபற்றுவதற்காக மாநகர சபையின் பிரதி மாநகர முதல்வர் மற்றும் உறுப்பினர்களிற்கு கொடுப்பனவாக முழு நாளொன்றுக்கு ரூபா 1,250.00 இனை விஞ்சாத வகையில் இணைந்த படிகளுக்கான கொடுப்பனவொன்றை மேற்கொள்ள முடியும் என்பதோடு, இக்கொடுப்பனவு மாதமொன்றுக்கு ஆகக் கூடியது 10 நாட்களுக்குள் மட்டுப்படுத்தப்பட வேண்டியதுடன், 10 நாட்களுக்கு மேற்படுமாயின் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அனுமதி பெறப்படுதலும் வேண்டும்.

*2. 3* அலுவலக ரீதியான கருத்தரங்குகள் மற்றும் நிகழ்வுகளில் பங்குபற்றும் பொழுது தங்குமிடக் கொடுப்பனவாக கீழ் குறிப்பிடப்படும் உச்ச எல்லையை விஞ்சாத தொகை ஒன்றினை மாநகர சபை நிதியிலிருந்து செலுத்த முடியும் என்பதுடன், இக்கொடுப்பனவு தொடர்பாக உரிய பற்றுச் சீட்டின் மூலப் பிரதி சமர்ப்பிக்கப்படுதலும் வேண்டும்.

| | | | | |
|---|---|---|---|---|
| 2. 3. 1 | மாநகர முதல்வர் | - | ரூபா | 3,000.00 |
| 2. 3. 2 | பிரதி மாநகர முதல்வர் | - | ரூபா | 2,500.00 |
| 2. 3. 3 | உறுப்பினர்கள் | - | ரூபா | 2,000.00 |

*குறிப்பு :*

I. மேற்படி கொடுப்பனவுகளானது மாநகர சபை அமைந்துள்ள நிர்வாக மாவட்டத்திற்கு வெளியே இடம்பெறும் கருத்தரங்குகள் மற்றும் நிகழ்வுகளில் பங்குபற்றுவதற்காக மட்டுமே செலுத்தப்படுதல் வேண்டும்.

II. அலுவலக ரீதியான கூட்டங்கள் மற்றும் ஏனைய நிகழ்வுகளுக்கான முறையான அழைப்பிதழ்கள் உரிய மாநகர சபையின் முதல்வர்/பிரதி மாநகர முதல்வர்/உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டிருக்காத சந்தர்ப்பத்தில் மேற்படி கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படலாகாது.

**03. உணவு மற்றும் உபசரணைச் செலவுகள்.-**

*3. 1* மாநகர சபையின் முதல்வர்களுக்கு உபசரணைச் செலவாக மாதாந்தம் ரூபா 3000.00 ஐ மாநகர சபை நிதியிலிருந்து மீளளிப்பு செய்ய முடியும். மேற்படி மீளளிப்பு நோக்கத்திற்காக உரிய செலவின் பற்றுச் சீட்டுக்கள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

3.2 மாநகர சபை பிரதி முதல்வருக்கு உபசரணைச் செலவாக மாதாந்தம் ரூபா 1,500.00 ஐ மாநகர சபை நிதியிலிருந்து மீளளிப்பு செய்ய முடியும். மேற்படி மீளளிப்பு நோக்கத்திற்காக உரிய செலவின் பற்றுச் சீட்டுக்கள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

3.3 மாநகர சபையின் மாதாந்த பொதுக்கூட்டங்கள் ஏழு மணித்தியாலங்களிற்கு குறைவாக இடம் பெறும் சந்தர்ப்பங்களில் பங்கு பற்றும் உறுப்பினர்கள் மற்றும் அலுவலர்களுக்கான உபசரணைகளை வழங்குவதற்காக ஒவ்வொருவர் சார்பிலும் அதிகபட்சமாக 100.00 ரூபாவை சபை நிதியிலிருந்து செலவிட முடியும். இவ்வாறான கூட்டமானது 7 மணித்தியாலங்களிற்கு மேற்படின் கலந்துகொள்ளும் உறுப்பினர்கள் மற்றும் உத்தியோகத்தர் தொடர்பில் அதிகபட்சமாக ரூபா 400.00 ஐ உணவு மற்றும் உபசரணைச் செலவாக சபை நிதியிலிருந்து செலவிட முடியும். மேற்படி மீளளிப்பு நோக்கத்திற்காக செலவின் பற்றுச் சீட்டுக்களின் உண்மை மூலப் பிரதி சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

**04. தொலைபேசிக் கொடுப்பனவு :**

4.1 மாநகர முதல்வருக்கு மாதாந்தம் ரூபா 4,000.00 ஐ அல்லது உண்மையான தொலைபேசி பற்றுச் சீட்டுக்களின் தொகையில், இவற்றில் எது குறைவாகக் காணப்படுகின்றதோ அத் தொகையினை வீட்டுத் தொலைபேசி மற்றும் கையடக்கத் தொலைபேசிக் கொடுப்பனவாக மாநகர சபை நிதியிலிருந்து மீளளிப்பாகப் பெற்றுக்கொள்ள முடியும்.

4.2 பிரதி மாநகர முதல்வர் மாதாந்தம் ரூபா 2,500.00 ஐ அல்லது உண்மையான தொலைபேசி பற்றுச் சீட்டுக்களின் தொகையில், இவற்றில் எது குறைவாகக் காணப்படுகின்றதோ அத் தொகையினை வீட்டுத் தொலைபேசி மற்றும் கையடக்கத் தொலைபேசிக் கொடுப்பனவாக மாநகர சபை நிதியிலிருந்து மீளளிப்பாகப் பெற்றுக்கொள்ள முடியும்.

4.3 மாநகர சபை உறுப்பினர்களுக்கு மாதாந்தம் கையடக்கத் தொலைபேசிக்காக ரூபா 1,000.00 ஐ அல்லது உண்மையான தொலைபேசி பற்றுச் சீட்டுக்களின் தொகையில், இவற்றில் எது குறைவாகக் காணப்படுகின்றதோ அத் தொகையினை தொலைபேசி கொடுப்பனவாக மாநகர சபை நிதியிலிருந்து மீளளிப்பாகப் பெற்றுக்கொள்ள முடியும்.

**குறிப்பு :**

மீளளிப்புக்காக சமர்ப்பிக்கப்படும் தொலைபேசிக் கட்டணப் பற்றுச்சீட்டானது குறித்த மாநகர முதல்வர்/பிரதி மாநகர முதல்வர்/மாநகர சபை உறுப்பினர்களின் பெயரில் காணப்படுவது அவசியமாகும்.

**05. மாநகர சபை விசேட கூட்டங்கள் மற்றும் நிலையியல் குழுக் கூட்டங்களில் கலந்து கொள்வதற்கான கொடுப்பனவு :**

5.1 மாநகர முதல்வர், பிரதி மாநகர முதல்வர் மற்றும் மாநகர சபை உறுப்பினர்களுக்கு விஷேட கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக ரூபா 500.00 ஐ கொடுப்பனவாக (ஆகக்கூடியது 02 கூட்டங்களுக்காக) சபை நிதியிலிருந்து செலுத்தப்படலாம்.

5.2 மாநகர முதல்வர், பிரதி மாநகர முதல்வர் மற்றும் மாநகர சபை உறுப்பினர்களுக்கு மாநகர சபைக் கட்டளைச் சட்டத்திற்கு அமைவாக உருவாக்கப்பட்ட நிலையியல் குழுக் கூட்டத்தில் கலந்து கொள்ளும் பொருட்டு ரூபா 250.00 ஐ கொடுப்பனவாக சபை நிதியிலிருந்து வழங்கலாம். இக் கொடுப்பனவானது குறிப்பிட்ட மாதத்தில் ஆகக் கூடியது மூன்று (03) நிதி நிலையியல் குழுக்கூட்டங்களிலும், இரண்டு (02) ஏனைய நிலையியல் குழுக் கூட்டங்களிலும் பங்குபற்றுவதற்காக மட்டுமே வழங்கப்படலாம்.

**06. மாநகர சபையின் நகர முதல்வரின் தனிப்பட்ட அலுவலருக்கான கொடுப்பனவு :**

6.1 மாநகர சபையின் மாநகர முதல்வர், தனது தனிப்பட்ட உதவியாளர் ஒருவரை விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் முன் அனுமதியுடன் நியமிக்க முடியும். அத் தனிப்பட்ட உதவியாளர் ஆகக் குறைந்தது கல்விப் பொதுத் தராதர உயர்தரத்தில் பிரதான மூன்று (3) பாடங்களிலும் சித்தியடைந்திருத்தல் (பழைய பாடத்திட்டமாயின் பிரதான நான்கு பாடங்கள்) அல்லது இரண்டு வருட அலுவலக செயலாளருக்கான டிப்ளோமா சான்றிதழ் (Office Secretary Ship) அல்லது அதற்கு சமமான பாடநெறியை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். மேற்படி தனிப்பட்ட உதவியாளருக்கு கொடுப்பனவாக மாதாந்தம் ரூபா 20,000.00 ஐ விஞ்சாத தொகையினை மாநகர சபை நிதியிலிருந்து செலுத்த முடியும்.

**07. மாநகர சபையின் நிதி நிலைமைக்கு அமைவாக மேற்படி அனைத்து கொடுப்பனவுத் தொகைகளின் எல்லைகளை விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் முன் அனுமதியுடன் குறைத்துக் கொள்ளலாம்.**

7 - 734/1

## கிழக்கு மாகாண மாகாண சபை

அறிவித்தல்

கிழக்கு மாகாணத்தின் ஆளுநர் அநுராதா யஹம்பத் ஆகிய என்னால், 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர் விளைவான) சட்டத்தின் 2 ஆவது சரத்துடன் இணைத்து வாசிக்கக் கூடியதான 255 ஆவது அத்தியாயம், நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 193 (1), (எ), (எஎ), (ஏ) பிரிவில் விடயதான அமைச்சருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம், எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தினால் நகர சபை தவிசாளர், உப தவிசாளர் மற்றும் உறுப்பினர்களுக்கான கீழே காட்டப்பட்டுள்ள கொடுப்பனவுகளுக்கான விதிகள் இத்தால் ஆக்கப்படுகின்றது. இவ் விதிகள் 2020, யூன் 23 ஆந் திகதியிலிருந்து செயற்படுத்தப்படுதல் வேண்டும்.

**அநுராதா யஹம்பத்,**
ஆளுநர்,
கிழக்கு மாகாணம்.

ஆளுநர் செயலகம்,
கிழக்கு மாகாணம்,
2020, யூன் 23.

விதிகள்

**01. நகர சபையின் தவிசாளர்களுக்கு, நகர சபையின் உத்தியோகபூர்வ போக்குவரத்திற்கான எரிபொருள் வரையறை :-**

1. 1 நகர சபையின் வாகனம் ஒன்றினை நகர சபை எல்லைக்குள் பயன்படுத்துவதாயின் மாதமொன்றிற்கு பெற்றோல்/டீசல் 80 லீற்றருக்கு அதிகரிக்காமலும், குறிப்பிட்ட வாகனமானது நகர சபை எல்லைக்கு வெளியே அலுவலக நோக்கத்திற்காக பயன்படுத்துவதாயின் மாதமொன்றிற்கு பெற்றோல்/டீசல் 100 லீற்றருக்கு அதிகரிக்காமலும் வழங்க நகர சபை நிதியிலிருந்து பயன்படுத்தலாம்.

1. 2 நகர சபை வாகனமல்லாத சந்தர்ப்பத்தில் மேலே குறிப்பிட்ட எரிபொருளுக்கான செலவு வரையறையினை விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அனுமதியைப் பெற்று, வாடகை வாகனத்திற்காக/தனிப்பட்ட வாகனமொன்றுக்காக மேற் குறித்த எரிபொருள் அளவுகள் மற்றும் வாடகை செலவீனத்தை சபை நிதியிலிருந்து மேற்கொள்ள முடியும். வாடகைக்கு பெறும் வாகனத்திற்கான மாதாந்த வாடகைத்தொகை விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

**குறிப்பு :**

I. மாவட்டத்திற்கு வெளியே வாகனத்தினை எடுத்துச் செல்லும் பொழுது குறித்துரைக்கப்பட்ட படிவத்தின் மூலம் உள்ளூராட்சி ஆணையாளரிடமிருந்து அனுமதி பெற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும்.

II. மாவட்டத்திற்கு உள்ளே வாகனத்தினை எடுத்துச் செல்லும் பொழுது குறித்துரைக்கப்பட்ட படிவத்தின் மூலம் உள்ளூராட்சி உதவி ஆணையாளரிடமிருந்து அனுமதி பெற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும்.

**02. போக்குவரத்துச் செலவு மற்றும் அதனோடிணைந்த கொடுப்பனவுகள் :-**

2. 1 தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகளிற்கு அமைவாக அலுவலக ரீதியான கருத்தரங்குகள் மற்றும் நிகழ்வுகளில் பங்குபற்றுவதற்காக நகர சபையின் தவிசாளருக்கான கொடுப்பனவாக முழு நாளொன்றுக்காக ரூபா 1,250.00 இனை விஞ்சாத வகையில் இணைந்த படிகளுக்கான கொடுப்பனவொன்றை மேற்கொள்ள முடியும் என்பதோடு, இக்கொடுப்பனவு மாதமொன்றுக்கு ஆகக் கூடியது 10 நாட்களுக்குள் மட்டுப்படுத்தப்பட வேண்டியதுடன், 10 நாட்களுக்கு மேற்படுமாயின் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அனுமதி பெறப்படுதலும் வேண்டும்.

2. 2 தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகளிற்கு அமைவாக அலுவலக ரீதியான கருத்தரங்குகள் மற்றும் நிகழ்வுகளில் பங்குபற்றுவதற்காக நகர சபையின் உப தவிசாளர் மற்றும் உறுப்பினர்களிற்கு கொடுப்பனவு முழு நாளொன்றுக்கு ரூபா 1,000.00 இனை விஞ்சாத வகையில் இணைந்த படிகளுக்கான கொடுப்பனவொன்றை மேற்கொள்ள முடியும் என்பதோடு, இக்கொடுப்பனவு மாதமொன்றுக்கு ஆகக் கூடியது 10 நாட்களுக்குள் மட்டுப்படுத்தப்பட வேண்டியதுடன், 10 நாட்களுக்கு மேற்படுமாயின் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அனுமதி பெறப்படுதலும் வேண்டும்.

2.3 அலுவலக ரீதியான கருத்தரங்குகள் மற்றும் நிகழ்வுகளில் பங்குபற்றும் பொழுது தங்குமிடக் கொடுப்பனவாக கீழ்க் குறிப்பிடப்படும் உச்ச எல்லையை விஞ்சாத தொகை ஒன்றினை நகர சபை நிதியிலிருந்து செலுத்த முடியும் என்பதுடன், இக்கொடுப்பனவு தொடர்பாக உரிய பற்றுச் சீட்டின் மூலப் பிரதி சமர்ப்பிக்கப்படுதலும் வேண்டும்.

| | | | | |
|---|---|---|---|---|
| 2.3.1 | தவிசாளர் | - | ரூபா | 2,500.00 |
| 2.3.2 | உப தவிசாளர் | - | ரூபா | 2,000.00 |
| 2.3.3 | உறுப்பினர்கள் | - | ரூபா | 1,500.00 |

*குறிப்பு :*

I. மேற்படி கொடுப்பனவுகளானவை நகர சபை அமைந்துள்ள நிர்வாக மாவட்டத்திற்கு வெளியே இடம்பெறும் உத்தியோகபூர்வ கருத்தரங்குகள் மற்றும் நிகழ்வுகளில் பங்குபற்றுவதற்காக மட்டுமே செலுத்தப்படுதல் வேண்டும்.

II. அலுவலக ரீதியான கூட்டங்கள் மற்றும் ஏனைய நிகழ்வுகளுக்கான முறையான அழைப்பிதழ்கள் உரிய நகர சபையின் தவிசாளர்/உப தவிசாளர்/உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டிருக்காத சந்தர்ப்பத்தில் மேற்படி கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படலாகாது.

**03. உணவு மற்றும் உபசரணைச் செலவுகள் :-**

3.1 நகர சபையின் தவிசாளர்களுக்கு உபசரணைச் செலவாக மாதாந்தம் ரூபா 2,500.00 ஐ நகர சபை நிதியிலிருந்து மீளளிப்பு செய்ய முடியும். மேற்படி மீளளிப்பு நோக்கத்திற்காக உரிய செலவின் பற்றுச் சீட்டுக்கள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

3.2 நகர சபையின் உப தவிசாளருக்கு உபசரணைச் செலவாக மாதாந்தம் ரூபா 1,250.00 ஐ நகர சபை நிதியிலிருந்து மீளளிப்பு செய்ய முடியும். மேற்படி மீளளிப்பு நோக்கத்திற்காக உரிய செலவின் பற்றுச் சீட்டுக்கள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

3.3 நகர சபையின் மாதாந்த பொதுக் கூட்டங்கள் ஏழு மணித்தியாலங்களிற்கு குறைவாக இடம் பெறும் சந்தர்ப்பங்களில் பங்கு பற்றும் உறுப்பினர்கள் மற்றும் அலுவலர்களுக்கான உபசரணைகளை வழங்குவதற்காக ஒவ்வொருவர் சார்பிலும் அதிகபட்சமாக ரூபா 100.00 ஐ சபை நிதியிலிருந்து செலவிட முடியும். இவ்வாறான கூட்டமானது 7 மணித்தியாலங்களிற்கு மேற்படின் கலந்துகொள்ளும் உறுப்பினர்கள் மற்றும் உத்தியோகத்தர் தொடர்பில் ரூபா 400.00 ஐ உணவு மற்றும் உபசரணைச் செலவாக சபை நிதியிலிருந்து செலவிட முடியும். மேற்படி மீளளிப்பு நோக்கத்திற்காக செலவின் பற்றுச் சீட்டுக்களின் உண்மை மூலப் பிரதி சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

**04. தொலைபேசிக் கொடுப்பனவு :**

4.1 நகர சபை தவிசாளர் மாதாந்தம் ரூபா 3,000.00 ஐ அல்லது உண்மையான தொலைபேசி பற்றுச் சீட்டுக்களின் தொகையில், இவற்றில் எது குறைவாகக் காணப்படுகின்றதோ அத் தொகையினை வீட்டுத் தொலைபேசி மற்றும் கையடக்கத் தொலைபேசி கொடுப்பனவாக நகர சபை நிதியிலிருந்து மீளளிப்பாகப் பெற்றுக்கொள்ள முடியும்.

4.2 நகர சபை உப தவிசாளர் மாதாந்தம் ரூபா 2,000.00 ஐ அல்லது உண்மையான தொலைபேசி பற்றுச் சீட்டுக்களின் தொகையில், இவற்றில் எது குறைவாகக் காணப்படுகின்றதோ அத் தொகையினை வீட்டுத் தொலைபேசி மற்றும் கையடக்கத் தொலைபேசி கொடுப்பனவாக நகர சபை நிதியிலிருந்து மீளளிப்பாகப் பெற்றுக்கொள்ள முடியும்.

4.3 நகர சபை உறுப்பினர்களுக்கு மாதாந்தம் கையடக்கத் தொலைபேசிக்காக ரூபா 1,000.00 ஐ அல்லது உண்மையான தொலைபேசி பற்றுச் சீட்டுத் தொகையில், இவற்றில் எது குறைவாகக் காணப்படுகின்றதோ அத் தொகையினை தொலைபேசி கொடுப்பனவாக நகர சபை நிதியிலிருந்து மீளளிக்கப்படலாம்.

*குறிப்பு :*

மீளளிப்புக்காக சமர்ப்பிக்கப்படும் தொலைபேசிக் கட்டணப் பற்றுச்சீட்டானது குறிப்பிட்ட நகர சபை தவிசாளர்/உப தவிசாளர்/ நகர சபை உறுப்பினர்களின் பெயரில் காணப்படுவது அவசியமாகும்.

**05. நகர சபை விஷேட கூட்டங்கள் மற்றும் சட்டவாக்க ஆலோசனை குழு/ஆலோசனை குழுக் கூட்டங்களில் கலந்து கொள்வதற்கான கொடுப்பனவு :**

5.1 நகர சபை தவிசாளர், உப தவிசாளர் மற்றும் உறுப்பினர்களுக்கு விஷேட கூட்டத்தில் கலந்துகொள்ளும் பொருட்டு ரூபா 500.00 ஐ கொடுப்பனவாக (ஆகக்கூடியது 02 கூட்டங்களுக்காக) சபை நிதியிலிருந்து செலுத்தப்படலாம்.

5. 2 நகர சபை தவிசாளர், உப தவிசாளர் உறுப்பினர்கள் மற்றும் ஏனைய குழு அங்கத்தவர்களுக்கு நகர சபை கட்டளைச் சட்டத்திற்கு அமைவாக உருவாக்கப்பட்ட நிலையியல் குழு/ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் கலந்து கொள்ளும் பொருட்டு ரூபா 250.00 ஐ கொடுப்பனவாக சபை நிதியிலிருந்து வழங்கலாம். இக் கொடுப்பனவானது குறிப்பிட்ட மாதத்தில் ஆகக் கூடியது மூன்று (03) நிதிக் குழுக் கூட்டங்களிலும், இரண்டு (02) ஏனைய ஆலோசனைக் குழுக் கூட்டங்களிலும் பங்குபற்றுவதற்காக மட்டுமே வழங்கப்படலாம்.

**06. நகர சபை தவிசாளரின் தனிப்பட்ட அலுவலருக்கான கொடுப்பனவு :**

6. 1 நகர சபையின் தவிசாளர், தனது தனிப்பட்ட உதவியாளர் ஒருவரை விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் முன் அனுமதியுடன் நியமிக்க முடியும். அத் தனிப்பட்ட உதவியாளர் ஆகக் குறைந்தது கல்விப் பொது தராதர உயர்தரத்தில் பிரதான மூன்று (3) பாடங்களிலும் சித்தியடைந்திருத்தல் (பழைய பாடத்திட்டமாயின் பிரதான நான்கு பாடங்கள்) அல்லது இரண்டு வருட அலுவலக செயலாளருக்கான டிப்ளோமா சான்றிதழ் (Office Secretary Ship) அல்லது அதற்கு சமமான பாடநெறியை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். மேற்படி தனிப்பட்ட உதவியாளருக்கு கொடுப்பனவாக மாதாந்தம் ரூபா 20,000.00 ஐ விஞ்சாத தொகையினை நகர சபை நிதியிலிருந்து செலுத்த முடியும்.

**07. நகர சபையின் நிதி நிலைமைக்கு அமைவாக மேற்படி அனைத்து கொடுப்பனவுத் தொகைகளின் அளவுகளை விடய அமைச்சரின் முன் அனுமதியைப் பெற்றுக் குறைத்துக் கொள்ளலாம்.**

7 - 734/2

---

**கிழக்கு மாகாண மாகாண சபை**

அறிவித்தல்

கிழக்கு மாகாணத்தின் ஆளுநர் அநுராதா யஹம்பத் ஆகிய என்னால், 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர் விளைவான) சட்டத்தின் 2 ஆவது சரத்துடன் இணைத்து வாசிக்கக் கூடியதான 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 184 (1), இ), (ஈ), (உ), (ஊ) பிரிவுகளில் விடயதான அமைச்சருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம், எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தினால் பிரதேச சபை தவிசாளர், உப தவிசாளர் மற்றும் உறுப்பினர்களுக்கான கீழே காட்டப்பட்டுள்ள கொடுப்பனவுகளுக்கான விதிகள் இத்தால் ஆக்கப்படுகின்றது. இவ் விதிகள் 2020, யூன் 23 ஆந் திகதியிலிருந்து செயற்படுத்தப்படுதல் வேண்டும்.

**அநுராதா யஹம்பத்,**
ஆளுநர்,
கிழக்கு மாகாணம்.

ஆளுநர் செயலகம்,
கிழக்கு மாகாணம்,
2020, யூன் 23.

விதிகள்

**01. பிரதேச சபையின் தவிசாளர்களுக்கு, பிரதேச சபையின் உத்தியோகபூர்வ போக்குவரத்திற்கான எரிபொருள் வரையறை.-**

1. 1 பிரதேச சபையின் வாகனம் ஒன்றினை பிரதேச சபையின் எல்லைக்குள் பயன்படுத்துவதுடன், பிரதேச சபையின் பரப்பளவானது 100 சதுர கிலோ மீற்றருக்கு குறைவாகவோ அல்லது சமனாகவோ காணப்படின் மாதமொன்றிற்கு பெற்றோல்/டீசல் 80 லீற்றருக்கு அதிகரிக்காமலும், அத்துடன்,

1. 2 பிரதேச சபையின் வாகனத்தினை பிரதேச சபை எல்லைக்குள் பயன்படுத்துவதுடன், பிரதேச சபையின் பரப்பளவானது 100 சதுர கிலோ மீற்றருக்கு அதிகமாகக் காணப்படின மாதமொன்றிற்கு பெற்றோல்/டீசல் 90 லீற்றருக்கு அதிகரிக்காமலும், அத்துடன்,

1. 3 குறிப்பிட்ட வாகனமானது பிரதேச சபை எல்லைக்கு வெளியே அலுவலக நோக்கத்திற்காக பயன்படுத்துவதாயின், மாதமொன்றிற்கு பெற்றோல்/டீசல் 100 லீற்றருக்கு அதிகரிக்காமலும் பிரதேச சபை நிதியிலிருந்து பயன்படுத்தலாம்.

1.4 பிரதேச சபை வாகனமல்லாத சந்தர்ப்பத்தில் மேலே குறிப்பிட்ட எரிபொருளுக்கான செலவு வரையறையினை விடயதான அமைச்சரின் அனுமதியைப் பெற்று, வாடகை வாகனத்திற்காக/தனிப்பட்ட வாகனமொன்றுக்காக மேற் குறித்த எரிபொருள் அளவுகள் மற்றும் வாடகை செலவீனத்தை சபை நிதியிலிருந்து மேற்கொள்ள முடியும். வாடகைக்கு பெறும் வாகனத்திற்கான மாதாந்த வாடகைத் தொகை விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரினால் தீர்மானிக்கப்படுதலும் வேண்டும்.

**குறிப்பு :**

I. மாவட்டத்திற்கு வெளியே வாகனத்தினை எடுத்துச் செல்லும் பொழுது குறித்துரைக்கப்பட்ட படிவத்தின் மூலம் உள்ளூராட்சி ஆணையாளரிடமிருந்து அனுமதி பெற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும்.

II. மாவட்டத்திற்கு உள்ளே வாகனத்தினை எடுத்துச் செல்லும் பொழுது குறித்துரைக்கப்பட்ட படிவத்தின் மூலம் உள்ளூராட்சி உதவி ஆணையாளரிடமிருந்து அனுமதி பெற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும்.

**02. போக்குவரத்துச் செலவு மற்றும் அதனோடிணைந்த கொடுப்பனவுகள் :-**

2.1 தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகளுக்கு அமைவாக அலுவலக ரீதியான கருத்தரங்குகள் மற்றும் நிகழ்வுகளில் பங்குபற்றுவதற்காக பிரதேச சபையின் தவிசாளருக்கான கொடுப்பனவாக முழு நாளொன்றுக்காக ரூபா 1,250.00 இனை விஞ்சாத வகையில் இணைந்த படிகளுக்கான கொடுப்பனவொன்றை மேற்கொள்ள முடியும் என்பதோடு, இக்கொடுப்பனவு மாதமொன்றுக்கு ஆகக் கூடியது 10 நாட்களுக்குள் மட்டுப்படுத்தப்பட வேண்டியதுடன், 10 நாட்களுக்கு மேற்படுமாயின் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அனுமதி பெறப்படுதலும் வேண்டும்.

2.2 தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகளுக்கு அமைவாக அலுவலக ரீதியான கருத்தரங்குகள் மற்றும் நிகழ்வுகளில் பங்குபற்றுவதற்காக பிரதேச சபையின் உப தவிசாளர் மற்றும் உறுப்பினர்களுக்கு கொடுப்பனவு முழு நாளொன்றுக்கு ரூபா 1,000.00 இனை விஞ்சாத வகையில் இணைந்த படிகளுக்கான கொடுப்பனவொன்றை மேற்கொள்ள முடியும் என்பதோடு, இக்கொடுப்பனவு மாதமொன்றுக்கு ஆகக் கூடியது 10 நாட்களுக்குள் மட்டுப்படுத்தப்பட வேண்டியதுடன், 10 நாட்களுக்கு மேற்படுமாயின் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அனுமதி பெறப்படுதலும் வேண்டும்.

2.3 அலுவலக ரீதியான கருத்தரங்குகள் மற்றும் நிகழ்வுகளில் பங்குபற்றும் பொழுது தங்குமிடக் கொடுப்பனவாக கீழ் குறிப்பிடப்படும் உச்ச எல்லையை விஞ்சாத தொகை ஒன்றினை பிரதேச சபை நிதியிலிருந்து செலுத்த முடியும் என்பதுடன், இக்கொடுப்பனவு தொடர்பாக உரிய பற்றுச் சீட்டின் மூலப் பிரதி சமர்ப்பிக்கப்படுதலும் வேண்டும்.

| | | | | |
|---|---|---|---|---|
| 2.3.1 | தவிசாளர் | - | ரூபா | 2,500.00 |
| 2.3.2 | உப தவிசாளர் | - | ரூபா | 2,000.00 |
| 2.3.3 | உறுப்பினர்கள் | - | ரூபா | 1,500.00 |

**குறிப்பு :**

I. மேற்படி கொடுப்பனவுகளானவை பிரதேச சபை அமைந்துள்ள நிர்வாக மாவட்டத்திற்கு வெளியே இடம்பெறும் உத்தியோகபூர்வ கருத்தரங்குகள் மற்றும் நிகழ்வுகளில் பங்குபற்றுவதற்காக மட்டுமே செலுத்தப்படுதல் வேண்டும்.

II. பிரதேச சபை அமைந்துள்ள நிர்வாக மாவட்டத்திற்குள் மேற்கொள்ளப்படும் பிரயாணங்கள் தொடர்பில் எந்தவொரு கொடுப்பனவும் வழங்கப்படமாட்டாது.

III. அலுவலக ரீதியான கூட்டங்கள் மற்றும் ஏனைய நிகழ்வுகளுக்கான முறையான அழைப்பிதழ்கள் உரிய பிரதேச சபையின் தவிசாளர் / உப தவிசாளர் / உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டிருக்காத சந்தர்ப்பத்தில் மேற்படி கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படலாகாது.

**03. உணவு மற்றும் உபசரணைச் செலவுகள் :-**

3.1 பிரதேச சபையின் தவிசாளருக்கு உபசரணைச் செலவாக மாதாந்தம் ரூபா 2,000.00 ஐ பிரதேச சபை நிதியிலிருந்து மீளளிப்பு செய்ய முடியும். மேற்படி மீளளிப்பு நோக்கத்திற்காக உரிய செலவின் பற்றுச் சீட்டுக்கள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

3.2 பிரதேச சபையின் உப தவிசாளருக்கு உபசரணைச் செலவாக மாதாந்தம் ரூபா 1,000.00 ஐ பிரதேச சபை நிதியிலிருந்து மீளளிப்பு செய்ய முடியும். மேற்படி மீளளிப்பு நோக்கத்திற்காக உரிய செலவின் பற்றுச் சீட்டுக்கள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

*3. 3* *பிரதேச சபையின் மாதாந்த பொதுக் கூட்டங்கள் ஏழு மணித்தியாலங்களிற்கு குறைவாக இடம் பெறும் சந்தர்ப்பங்களில் பங்கு பற்றும் உறுப்பினர்கள் மற்றும் அலுவலர்களுக்கான உபசரணைகளை வழங்குவதற்காக ஒவ்வொருவர் சார்பிலும் அதிகபட்சமாக ரூபா 100.00 ஐ சபை நிதியிலிருந்து செலவிட முடியும். இவ்வாறான கூட்டமானது 7 மணித்தியாலங்களிற்கு மேற்படின் கலந்துகொள்ளும் உறுப்பினர்கள் மற்றும் உத்தியோகத்தர் தொடர்பில் ரூபா 400.00 ஐ உணவு மற்றும் உபசரணைச் செலவாக சபை நிதியிலிருந்து செலவிட முடியும். மேற்படி மீளளிப்பு நோக்கத்திற்காக செலவின் பற்றுச் சீட்டுக்களின் உண்மை மூலப் பிரதி சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.*

**04. தொலைபேசிக் கொடுப்பனவு :**

*4. 1* *பிரதேச சபை தவிசாளர் மாதாந்தம் ரூபா 2,500.00 ஐ அல்லது உண்மையான தொலைபேசி பற்றுச் சீட்டுக்களின் தொகையில், இவற்றில் எது குறைவாகக் காணப்படுகின்றதோ அத் தொகையினை வீட்டுத் தொலைபேசி மற்றும் கையடக்கத் தொலைபேசி கொடுப்பனவாக பிரதேச சபை நிதியிலிருந்து மீளளிப்பாகப் பெற்றுக்கொள்ள முடியும்.*

*4. 2* *பிரதேச சபை உப தவிசாளர் மாதாந்தம் ரூபா 1500.00 ஐ அல்லது உண்மையான தொலைபேசி பற்றுச் சீட்டுக்களின் தொகையில், இவற்றில் எது குறைவாகக் காணப்படுகின்றதோ அத் தொகையினை வீட்டுத் தொலைபேசி மற்றும் கையடக்கத் தொலைபேசி கொடுப்பனவாக பிரதேச சபை நிதியிலிருந்து மீளளிப்பாகப் பெற்றுக்கொள்ள முடியும்.*

*4. 3* *பிரதேச சபை உறுப்பினர்களுக்கு மாதாந்தம் கையடக்கத் தொலைபேசிக்காக ரூபா 1,000.00 ஐ அல்லது உண்மையான தொலைபேசி பற்றுச் சீட்டுத் தொகையில், இவற்றில் எது குறைவாகக் காணப்படுகின்றதோ அத் தொகையினை தொலைபேசி கொடுப்பனவாக பிரதேச சபை நிதியிலிருந்து மீளளிக்கப்படலாம்.*

***குறிப்பு :***

*மீளளிப்புக்காக சமர்ப்பிக்கப்படும் தொலைபேசிக் கட்டணப் பற்றுச்சீட்டானது குறிப்பிட்ட பிரதேச சபை தவிசாளர்/ உப தவிசாளர்/பிரதேச சபை உறுப்பினர்களின் பெயரில் காணப்படுவது அவசியமாகும்.*

**05. பிரதேச சபை விஷேட கூட்டங்கள் மற்றும் சட்டவாக்க ஆலோசனைக் குழு/ஆலோசனை குழுக் கூட்டங்களில் கலந்து கொள்வதற்கான கொடுப்பனவு :**

*5. 1* *பிரதேச சபை தவிசாளர், உப தவிசாளர் மற்றும் உறுப்பினர்களுக்கு விஷேட கூட்டத்தில் கலந்துகொள்ளும் பொருட்டு ரூபா 500.00 ஐ கொடுப்பனவாக (ஆகக் கூடியது 02 கூட்டங்களுக்காக) சபை நிதியிலிருந்து செலுத்தப்படலாம்.*

*5. 2* *பிரதேச சபை தவிசாளர், உப தவிசாளர் உறுப்பினர்கள் மற்றும் ஏனைய குழு அங்கத்தவர்களுக்கு பிரதேச சபை சட்டத்திற்கு அமைவாக உருவாக்கப்பட்ட நிலையியல் குழு/ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் கலந்து கொள்ளும் பொருட்டு ரூபா 250.00 ஐ கொடுப்பனவாக சபை நிதியிலிருந்து வழங்கலாம். இக் கொடுப்பனவானது குறிப்பிட்ட மாதத்தில் ஆகக் கூடியது மூன்று (03) நிதிக் குழுக் கூட்டங்களிலும், இரண்டு (02) ஏனைய ஆலோசனைக் குழுக் கூட்டங்களிலும் பங்குபற்றுவதற்காக மட்டுமே வழங்கப்படலாம்.*

**06. பிரதேச சபையின் நிதி நிலைமைக்கு அமைவாக மேற்படி அனைத்து கொடுப்பனவுத் தொகைகளின் அளவுகளை விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் முன் அனுமதியைப் பெற்றுக் குறைத்துக் கொள்ளலாம்.**

*7 - 734/3*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.